


**11.07.2024**

தலைப்புச் செய்திகள்

1. மத்திய பட்ஜெட் குறித்து பொருளாதார நிபுணர்களுடன் பிரதமர் திரு.நரேந்திரமோடி புதுதில்லியில் தற்போது ஆலோசனை மேற்கொண்டுள்ளார்.

2. பிம்ஸ்டெக் நாடுகளின் வெளியுறவுத்துறை அமைச்சர்கள் நிலையிலான கூட்டம் புதுதில்லியில் இன்று நடைபெறுகிறது.

3. அரூர் பேரூராட்சி நகராட்சியாக தரம் உயர்த்தப்படும் என்று முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

4. எல்லை தாண்டி மீன்பிடித்ததாக கூறி புதுக்கோட்டையை சேர்ந்த 13 மீனவர்களை இலங்கை கடற்படையினர் கைது செய்துள்ளனர்.

5. ஜெர்மனியில் நடைபெறும் சேலஞ்சர்ஸ் டென்னிஸ் ஆடவர் இரட்டையர் காலிறுதியில் இந்தியாவின் ஸ்ரீராம் பாலாஜி - ஈக்வடாரின் எஸ்கோபர் இணை இன்று களமிறங்குகிறது.

************

பிரதமர்

பிரதமர் திரு.நரேந்திரமோடி பொருளாதார நிபுணர்களுடன் புதுதில்லியில் தற்போது ஆலோசனை மேற்கொண்டுள்ளார்.

மத்திய பட்ஜெட் வரும் 23ஆம் தேதி தாக்கல் செய்யப்பட உள்ள நிலையில் பொருளாதார நிபுணர்களின் கருத்துக்களையும், ஆலோசனைகளையும் கேட்டறிகிறார்.

இந்த ஆலோசனைக்கூட்டத்தில் மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன்,

நித்தி ஆயோக் துணை தலைவர் சுமன் பெரி

பல்வேறு துறைகளை சார்ந்த வல்லுநர்கள் பங்கேற்றுள்ளனர்.

3ஆவது முறையாக பிரதமர் திரு.நரேந்திரமோடி தலைமையில் ஆட்சி அமைந்த பின்னர் முதற்முறையாக இந்த பட்ஜெட் தாக்கல் செய்யப்படுவதால் இந்த கூட்டம் முக்கியத்துவம் பெறுகிறது.

************

**ஜெய்சங்கர்**

வங்க கடல் பகுதியில் அமைந்துள்ள நாடுகளின் பிம்ஸ்டெக் வெளியுறவுத்துறை அமைச்சர்கள் நிலையிலான கூட்டம் புதுதில்லியில் இன்று நடைபெறுகிறது.

மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கர் தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்தில் கடற்பகுதிகளின் பாதுகாப்பு, வர்த்தகம், முதலீடு, தகவல் தொடர்பு உள்ளிட்டவற்றை மேலும் வலுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் குறித்து விவாதிக்கப்படுகிறது.

இந்தியா, இலங்கை, பங்களாதேஷ், மியான்மர், தாய்லாந்து, நேபாளம், பூட்டான் ஆகிய 7 தென்கிழக்காசிய நாடுகளை உள்ளடக்கியது பிம்ஸ்டெக் அமைப்பாகும்.

************

**கஜேந்திரசிங் ஷெகாவத்**

புதுதில்லியில் உள்ள தேசிய அருங்காட்சியகத்தில் தாய்லாந்து - இந்தியா இடையிலான பாரம்பரியமிக்க பெருமைகள் மற்றும் புத்த நம்பிக்கை தொடர்பான கண்காட்சியை மத்திய கலாச்சாரத்துறை அமைச்சர் திரு.கஜேந்திரசிங் ஷெகாவத் இன்று தொடங்கிவைத்தார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய அமைச்சர் புத்தர் மீது தாய்லாந்து சமூகத்தினர் கொண்டுள்ள நம்பிக்கையும், அமைதி மற்றும் அன்பு தொடர்பான அவரது போதனைகளும் இந்த கண்காட்சியில் இடம்பெற்றிருப்பது குறித்து மகிழ்ச்சி தெரிவித்தார்.

இருநாடுகளுக்கிடையிலான கலாச்சார பிணைப்பை எடுத்துரைத்த அமைச்சர் இதற்கு இந்த கண்காட்சி ஒரு சான்றாக திகழ்கிறது என்றார்.

புத்தரின் பாரம்பரிய பெருமைகள் கலாச்சார சிறப்புகளுக்கு மரியாதை செலுத்த இந்திய அரசு வழங்கிய வாய்ப்பிற்கு தாய்லாந்து வெளியுறவு அமைச்சர் **மேரீஸ் சஞ்சியம் போங்ஸா** நன்றி தெரிவித்துக்கொண்டார்.

************

**உலக மக்கள் தொகை தினம்**

உலக மக்கள் தொகை தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது.

மக்கள் தொகை அதிகரிப்பதால் எழும் சவால்களை சமாளிப்பது மற்றும் புதிய வாய்ப்புகளை கண்டறிய முக்கியத்துவம் அளிப்பதே இத்தினத்தின் நோக்கமாகும்.

நிலையான வளர்ச்சி கொண்ட எதிர்காலத்தை உருவாக்குவதற்கான நிலைப்பாடுகள் குறித்து ஆராயும் வகையில் இத்தினத்தில் பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

"ஒருவரையும் விட்டுவிடாமல் அனைவரையும் எண்ணுங்கள்" என்பதை கருப்பொருளாக கொண்டு இத்தினம் கடைபிடிக்கப்படுகிறது.

இந்நாளை ஒட்டி மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் ஜே.பி.நட்டா வெளியிட்டுள்ள சமூகவலைதள பதிவில், மக்கள் தொகை பெருக்கத்தினால் ஏற்படும் சவால்களை எதிர்கொள்வதற்கான நடவடிக்கைகளை மத்திய அரசு மேற்கொண்டு வருவதாக கூறினார்.

வரும் தலைமுறையினருக்கு வளமான எதிர்காலத்தை உருவாக்கிதரும் நோக்கில் இத்தினம் கடைபிடிக்கப்படுவதாக கூறிய அவர் அனைவருக்கும் மருத்துவ வசதி உறுதி செய்யப்பட்டு ஆரோக்கியமான இந்தியா கட்டமைக்கப்படும் என்றார்.

தமிழகம் முழுவதும் இத்தினத்தை ஒட்டி சிறப்பு விழிப்புணர்வு ஊர்வலங்கள் நடைபெறுகின்றன.

**விருதுநகர் மாவட்டத்தில்** விழிப்புணர்வு பேரணியை ஆட்சித்தலைவர் திரு.ஜெயசீலன் இன்று கொடியசைத்து தொடங்கிவைத்தார்.

**இதுகுறித்து எமது செய்தியாளர்**

**வாய்ஸ்**

**கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவிலில்** மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஸ்ரீதர் தொடங்கிவைத்த விழிப்புணர்வு பேரணியில் செண்டை மேளங்களுடன் மாணவர்களின் சிலம்பாட்டமும் இடம்பெற்றது.

**திருவையாறு இசைக்கல்லூரி மாணவிகளின்** விழிப்புணர்வு இசை நிகழ்ச்சியோடு நடைபெற்ற பேரணியை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.தீபக் ஜேக்கப் தொடங்கிவைத்தார்.

**பெரம்பலூர் மாவட்டம் அம்மாபாளையம்** வாலிகண்டபுரம் உள்ளிட்ட பகுதிகளில் இன்று நடைபெறும் குடும்ப நல சேவை முகாமில் பொதுமக்கள் பங்கேற்றனர்.

************

**ஜார்கண்ட் - தேர்தல் ஆணையம்**

ஜார்கண்ட் தலைநகர் ராஞ்சியில் அம்மாநில சட்டப்பேரவை தேர்தல் குறித்து தேர்தல் ஆணையம் மாவட்ட ஆட்சித்தலைவர்கள் மற்றும் காவல்துறை கண்காணிப்பாளர்களுடன் இன்று ஆலோசனைகளை மேற்கொள்கிறது.

இம்மாநிலத்தில் சட்டப்பேரவை தேர்தல் இந்தாண்டு இறுதியில் நடைபெற உள்ள நிலையில் தேர்தலுக்கான முன்னேற்பாட்டு பணிகள் முழுவீச்சில் நடைபெற்று வருகின்றன.

************

**முதலமைச்சர்**

தர்மபுரி மாவட்டம் அரூர் பேரூராட்சி நகராட்சியாக தரம் உயர்த்தப்படும் என்று முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

தர்மபுரி மாவட்டம் பாளையம்புதூர் ஊராட்சி அரசு மேல்நிலைப்பள்ளியில் மக்களுடன் முதல்வர் திட்ட விரிவாக்கத்தை இன்று தொடங்கிவைத்து பேசிய அவர் தீர்த்தமலையில் துணை வேளாண் விரிவாக்க மையம் அமைக்கப்படும் என்றார்.

மேலும் வெண்ணாம்பட்டி ரயில்வே மேம்பாலம் 38 கோடி ரூபாய் செலவில் மேம்படுத்தப்படும் உள்ளிட்ட புதிய அறிவிப்புகளை முதலமைச்சர் இன்று வெளியிட்டார்.

**வாய்ஸ்**

பாலாற்றின் குறுக்கே தடுப்பணை கட்ட ஆந்திர அரசு முயற்சிகள் மேற்கொண்டால் அதனை தடுக்க தமிழக அரசு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்று மாநில நீர்வளத்துறை அமைச்சர் திரு. துரைமுருகன் தெரிவித்துள்ளார்

வேலூர் மாவட்டம் காட்பாடி அருகே சேவூர் பகுதியில் மக்களுடன் முதல்வர் திட்டத்தை இன்று துவக்கிவைத்து பேசிய அவர், ஊரக பகுதி மக்களின் குறைகளை களையும் வகையில் இந்த திட்டம் செயல்படுத்தப்படுவதாக கூறினார்.

இந்நிகழ்வில் கோரிக்கை மனுக்களை அளித்த 2 பயனாளிகளுக்கு நல திட்ட உதவிகளை அமைச்சர் வழங்கினார்.

**திருச்சி நவல்பட்டு ஊராட்சியில்** இந்த திட்ட விரிவாக்கத்தை மாநில பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் திரு.அன்பில்மகேஷ் பொய்யாமொழி இன்று தொடங்கிவைத்தார்.

************

**அழகுமுத்துகோன்**

சுதந்திரபோராட்ட வீரர் அழகுமுத்துகோனின் பிறந்த நாள் இன்று கொண்டாடப்படுகிறது.

இந்நாளை ஒட்டி மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணை அமைச்சர் டாக்டர் எல்.முருகன் விடுத்துள்ள செய்தியில் தேசத்தின் முதல் சுதந்திர போராட்ட தியாகியான முத்துக்கோன் தீரத்துடன், தாய்நாட்டிற்கு ஆற்றிய சேவை குறித்து புகழாரம் சூட்டியுள்ளார்.

சென்னை எழும்பூர் ரயில் நிலையம் அருகே முத்துக்கோன் திருவுருவ சிலைக்கு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அரசின் சார்பில் இன்று மாலைஅணிவித்து மரியாதை செலுத்தினார்.

************

**கே.ஆர்.பெரியகருப்பன்**

கூட்டுறவு சங்க பணியாளர்களின் குறைகளை களையும் வகையில் இரு மாதங்களுக்கு ஒருமுறை 2 ஆவது வெள்ளிக்கிழமைகளில் மண்டல அளவில் பணியாளர் நாள் நிகழ்வு நடத்தப்படும் என்று மாநில கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.கே.ஆர்.பெரியகருப்பன் தெரிவித்துள்ளார்.

சென்னையில் இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் ஒன்றுக்கும் மேற்பட்ட மாவட்டங்களை உள்ளடக்கிய மத்திய கூட்டுறவு வங்கியின் மேலாண் இயக்குனர்கள் சுழற்சி முறையில் இக்கூட்டத்தினை நடத்தலாம் எனவும் இதில் எடுக்கப்படும் தீர்வுகளை இணையத்தில் பதிவேற்றம் செய்ய வேண்டும் எனவும் கூறியுள்ளார்.

************

**பொதுவிநியோகம்**

பொதுவிநியோக திட்டத்தின் சார்பில் பொதுமக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாநிலம் முழுவதும் நாளை மறுநாள் நடைபெற உள்ளதாக தமிழக அரசு தெரிவித்துள்ளது.

குடும்ப அட்டைகளில் பெயர் சேர்த்தல் நீக்கம் முகவரி மாற்றம், கைபேசி எண் பதிவு உள்ளிட்ட சேவைகள் இதில் மேற்கொள்ளப்படும்.

நியாயவிலைக்கடைக்கு வர இயலாத மூத்த குடிமக்களுக்கு அங்கீகார சான்றும் இதில் வழங்கப்பட உள்ளதால் பொதுமக்கள் இதனை பயன்படுத்திக்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

************

**மீனவர்கள்**

எல்லை தாண்டி கச்ச தீவு அருகே மீன்பிடித்ததாக கூறி புதுக்கோட்டையை சேர்ந்த 13 மீனவர்களை இலங்கை கடற்படையினர் கைது செய்துள்ளதோடு அவர்களது 3 படகுகளையும் பறிமுதல் செய்துள்ளனர்.

இம்மீனவர்கள் விசாரணைக்காக காங்கேசன் கடற்படை முகாமிற்கு அழைத்துச்செல்லப்பட்டுள்ளனர்.

கடந்த ஒன்றாம் தேதி 25 மீனவர்களை இலங்கை கடற்படையினர் பிடித்துச்சென்ற நிலையில் மீண்டும் இத்தகைய சம்பவம் நடைபெற்றுள்ளது மீனவர்கள் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

************

**சி.ஏ.தேர்வு**

இந்திய பட்டய கணக்காளர் படிப்பிற்கான தேர்வு முடிவுகள் இன்று வெளியிடப்பட்டுள்ளன.

இதுவரை இல்லாத அளவாக 20 ஆயிரத்து 446 பேர் இத்தேர்வில் தேர்ச்சி பெற்றுள்ளனர்.

முந்தைய ஆண்டுகளில் 13 ஆயிரம் முதல் 15 ஆயிரம் பேர் வரை மட்டுமே தேர்ச்சிபெற்றுவந்த நிலையில் இந்தாண்டு இந்த எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

************

**இருவரி**

**நாகை மாவட்டத்தில் பிரதமரின் தேசிய** தொழில் பழகுநர் பயிற்சிக்கான சேர்க்கை முகாம் அரசு தொழில் பயிற்சி நிலைய வளாகத்தில் வரும் 15ஆம் தேதி நடைபெற உள்ளதாக ஆட்சித்தலைவர் திரு.ஜானி டாம் வர்க்கீஸ் கூறியுள்ளார்.

************

**கோவில்**

தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில் அருள்மிகு சங்கரநாராயணர் கோமதி அம்பாள் திருக்கோவிலில் ஆடித்தபசு திருவிழா இன்றுகாலை கொடியேற்றத்துடன் தொடங்கியது.

**இதுகுறித்து எமது செய்தியாளர்**

**வாய்ஸ்**

************

**டென்னிஸ்**

ஜெர்மனியில் நடைபெறும் சேலஞ்சர்ஸ் டென்னிஸ் ஆடவர் இரட்டையர் காலிறுதியில் இந்தியாவின் ஸ்ரீராம் பாலாஜி - ஈக்வடாரின் எஸ்கோபர் இணை பிரேசிலின் Demoliner, அர்ஜென்டினாவின் Duran இணையை இன்று எதிர்கொள்கிறது.

************

**இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது**

************